

# உரைமுரசு

பதிப்பாசிரியர்

முனைவர் பா.அருள்ஜோதி

# உரைமுரசு

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410, 48601884
www.ncbhpublisher.in | email: info@ncbh.in

ISBN 978-81-2343-943-3

Code No. A4296 ₹ 65.00

Language: Tamil

**Urai Murasu**

Author: **Dr. B. Aruljothi**

First Edition : December, 2019

Copyright : Publisher

No.of Pages : 76

Publisher:

**New Century Book House Pvt. Ltd.,**

41-B, SIDCO Industrial Estate,

Ambattur, Chennai - 600 050.

Tamilnadu State, India.

email: info@ncbh.in

Online: www.ncbhpublisher.in

ISBN. 978 - 81 - 2343 - 943 - 3

Code No. A 4296

**₹ 65.00**

**Branches**

**Ambattur (H.O.)** 044 - 26359906 **Spenzer Plaza (Chennai)** 044-28490027 **Trichy** 0431-2700885 **Pudukkottai** 04322- 227773 **Tanjore** 04362-231371 **Tirunelveli** 0462-4210990, 2323990 **Madurai** 0452 2344106, 4374106 **Dindigul** 0451-2432172 **Coimbatore** 0422-2380554 **Erode** 0424-2256667 **Salem** 0427-2450817 **Hosur** 04344-245726 **Krishnagiri** 0434-3234387 **Ooty** 0423 2441743 **Vellore** 0416-2234495 **Villupuram** 04146-227800 **Pondicherry** 0413-2280101 **Nagercoil**

**உரை முரசு**

பதிப்பாசிரியர் : முனைவர் பா. அருள்ஜோதி

முதல் பதிப்பு : டிசம்பர். 2019

அச்சிட்டோர்: **பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,**

16 (142), ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14

☎: 044-28482441

All rights reserved. No part of this book may be reprinted or reproduced or utilised in any form or by any electronic, mechanical, or other means, now known or hereafter invented, including photocopying and recording, or in any information storage or retrieval system, without permission in writing from the publishers.

# 7. தற்கால இலக்கியங்களில் தலித்தியம்

-முனைவர் பே. மகேஸ்வரி

அடக்கப்பட்ட, அமுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, ஓரம்கட்டப்பட்ட மக்களின் அனுபவங்களின் துயரக்குரலே தலித்தியம். சமூகம், அரசியல், பொருளாதார, சாதிய அடக்குமுறைகளில் இருந்து மீறி வெளிவரத் துடிக்கும் உணர்வை, முனைப்பை, தேவையை வெளிப்படுத்துவது தலித்தியம். "தலித்" என்பது சாதியைக் குறிப்பதல்ல. இது அனுபவங்களையும், அது தரும் சந்தோசங்களையும், சோகங்களையும் உணர்வது. கொடுமைக்கும், ஒடுக்குமுறைக்கும் எதிரான எழுச்சி தலித்தியம் 'முகில் தமிழில் தலித் இலக்கியம்' என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"தலித்" என்பது வேதனையின் குறியீடாக இருக்க வேண்டுமே தவிர சுரண்டலின் குறியீடாக ஆகிவிடக்கூடாது. சுரண்டலின் மற்றும் கொடுமை, அக்கிரமங்களை எதிர்க்கிற குறியீடாக மலர வேண்டும். அவமானம், பாதுகாப்பின்மை, எதிர்ப்பு ஆகிய பொருள்களைத் "தலிது" என்கிற சொல் தரவேண்டும் என்பார் சித்தலிங்கையா.

தலித் இலக்கியம் என்பது தலித்துக்களைப் பற்றியதா? அல்லது தலித் படைப்பாளியால் படைக்கப்படுவதா? எனப் பலவாறு விவாதங்கள் நிலவுகின்றன. எல்லா வகையான விவாதங்களையும் அகப்படுத்தியதாகவும் விடை காணும் முகமாகவும் தலித் இலக்கியம் பற்றி வரையறை செய்கின்றனர். எல்லா வகையிலும் உள்ள ஒடுக்குமுறைகளை எதிர்த்து, இனி தனக்குக்கீழ் ஒடுக்குவதற்கு எதுவும் இல்லா நிலையை உருவாக்கும் கோக்கடைய இலக்கியத்தைத்தான் "தலித் இலக்கியம்" என்பர் திறனாய்வாளர். (ராஜ் கௌதமன், தமிழக தலித்தும் தலித் இலக்கியமும் (பக். 11 -12)

**"தற்கால இலக்கியங்களில் தலித்தியம்"**

புதினங்களைப் பொறுத்தவரை சுதந்திரத்திற்குப் பின்பே தலித் மக்களைப் பற்றித் தனியான இலக்கியப் பதிவுகள் வந்திருக்கின்றன. டி. செல்வராசு எழுதிய "மலரும் சருகும்" (1970-இல் வெளிவந்த) என்ற புதினம் முதல் தலித் புதினமாகக் குறிப்பிடப்படுகிறது. ஆனால் 1979-இல் வெளி வந்த பூமணியின் "பிறகு" என்ற புதினத்தில்தான் தலித் இலக்கியத்தின் அனைத்து உட்கூறுகளும் திறம்பட கையாளப்

பட்டுள்ளதைக் காணமுடிகிறது. அந்த வகையில் தமிழகத்தில் தலித் இலக்கியம் என்று பேசப்படுவதற்கு முன்பு தலித் பற்றிய இலக்கியங்களைத் தந்தவர் சிவகாமி. இவரின் ஆனந்தாயி, பழையன கழிதலும், குறுக்கு வெட்டு, ப.க.ஆ.கு என்பவை சிறப்பாகப் பேசப்பட்டவை. இதில் பழையன கழிதலும் என்னும் புதினம் தலித் அரசியல் தலைமையின் பலவீனத்தைப் பட்டவர்த்தனமாக்குகிறது. தமிழில் தலித் இலக்கியம் என்று தனியாகப் பேச வேண்டியதன் சமூகத்தேவைகள் உணரப்பட்ட போது பாமாவால் எழுதப்பட்டு வெளிவந்த "கருக்கு" என்னும் தன் வரலாற்றுப் புதினம் மிகுந்த கவனத்தைப் பெற்றது. இதில் கவனிக்கவேண்டிய முக்கியமான விசயம் தலித் இலக்கியம் தோன்றியுள்ள மொழிகளில் பெரும்பாலும் தன் வரலாற்றுப் புதினங்களே முதன்முதலாக வெளிவந்தன. தஞ்சைப் பகுதிகளில் உழைக்கும் தலித் மக்களுக்குச் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கம்யூனிஸ்ட் சித்தாந்தத்துடன் சோலை சுந்தரப்பெருமாள் செந்நெல், தப்பாட்டம் என்ற இரு தலித் புதினங்களைத் தந்துள்ளார். இந்திரா பார்த்தசாரதியின் "குருதிப்புனல்" 1975-இல் வெளியான புதினம். செந்நெல் தலித் இலக்கியம் எனப் பேசப்பட்ட பிறகு வெளியான புதினம், இரண்டும் கதை கூறும் தன்மையில் வேறுபடுகின்றன. முந்தையது ஆண்மையற்றவன் என உளவியல் காரணம் கூற, பின்னது சாதியின் உக்கிரத்தை வெளிப்படுத்துகிறது.

டி. செல்வராஜ் எழுதிய "மலரும் சருகும்" என்ற நாவல் நெல்லை வட்டாரத்தைப் பின்புலமாகக் கொண்டது. தலித்துக்களை ஒரே தளத்தில் ஒரே பரிணாமத்தில் அல்லாமல் பல தளங்களில் பல பரிமாணங்களில் காட்டுகிறது. கூலி விவசாயிகளாகவும், சில நிலவுடமைக்கிழார்களாகவும் இருக்கின்ற தாழ்த்தப்பட்ட பாமர மக்கள் எப்படித் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவும், தங்கள் நிலங்களையும், தொழில்களையும் காப்பாற்றிக் கொள்ளவும் துன்பப்படுகிறார்கள் என்பதை இந்த நாவல் எதார்த்தமான உத்தியில் சித்தரிக்கின்றது. இவர்கள் மத்தியில் தோன்றிய ஒரு இளைஞன் சப்இன்ஸ்பெக்டராக ஆகிறான். ஆனால் அந்த அதிகாரமும் புதிய உறவுகளும் அவனைத் தன்னுடைய சக மனிதர்களுக்கு எதிராக நிறுத்துகின்றன. இன்னொருவன், ராணுவத்திலிருந்து ஓய்வு பெற்று வருகிறான். தன்னுடைய மக்களின் பிரச்சனைகளை எடுத்துக்கொண்டு அவர்களுக்காக உழைக்கிறான். இந்நாவலில் வருகிற ஒவ்வொரு பாத்திரமும், தலித்துகளின் மாறிவரும் வாழ்நிலைகளையும், நடப்பியல் நிலையில் வெளிப்படுத்துகிறது. ஈழத்தின் சூழலில் கே. டானியல் எழுதிய "பஞ்சமர்" என்ற நாவலும் தலித்துகளின் வாழ்க்கையை எதார்த்தமாகவும், போராட்டப் பண்போடும் சித்தரிக்கின்றது.

"விதைச்சோளம்" என்னும் நாவலின் கதாநாயகன் நிம்மன் வாயிலாக, கல்வியின் அவசியத்தை, "மாங்கு மாங்குன்னு பாடுபட்டே இருக்கிறோமே ஒழிய எதாச்சும் ரெண்டு எழுத்தைப் படிச்சுப்பார்க்கத் தெரியுதா? நம்மளோட கடும்பாட்டையெல்லாம் காலகாலமா மித்தவங்க உறிஞ்சிகிட்டே இருக்கிறாங்க... அப்பிடிங்கிறதையும் அதுக்குப் படிப்பறிவில்லாமப் போனதும் முக்கியமான காரணமுங்குறதையும் அறிஞ்சு அதிலயிருந்து மீளத்தான் முடிஞ்சுதா? என மனக்கூற்றின் படி அவன் உளப்பாங்கினை அறியலாம்.

சிறுகதைகள் புதினங்கள் அன்றியும் பலர் கவிதைகளிலும் பதிவு செய்துள்ளனர். மதிவண்ணன், என். டி. ராஜ்குமார், உஞ்ஞை, ராஜன் பராமன், இராச முருகுபாண்டியன், பிரதிபா ஜெயச்சந்திரன், பாரதிவசந்தன் போன்றோர் தலித்மக்களின் வாழ்க்கையனுபவங்கள், உணர்வுகள், சிந்தனைகள், எதிர்வினைகள் போன்றவற்றைச் சித்தரிக்கின்றனர்.

**தலித்தியம் பேசும் புதுக்கவிதைகள்**

பூர்வீக மனிதன் பல நேரங்களில் தர்க்கத்தை விடுத்து நினைவுத் திறனில் நம்பிக்கை வைத்தான். எனவே, மரபு சமூக உறவுகளை ஒழுங்குபடுத்துகின்ற ஒரே வடிவமாக இல்லாவிட்டாலும், மிக முக்கியமான வடிவமாக நெடுங்காலம் இந்தச் சமூகத்தின் உழைக்கும் மக்களே ஆவர். அதிலும் குறிப்பிடத்தக்க இவ்வினத்தினரின் தனிமனித உணர்வுகளைப் பாடல் வடிவாகக் கூறி, பொருளாக்கியுள்ளனர். அந்த வகையில் ஈரோடு தமிழன்பன் அவர்கள்,

கலப்பு மணம் என்பது சிக்கல் நிறைந்ததாகவே உள்ளது. கலப்புமணம் புரிந்துகொள்வோரின் குடும்பங்களில் இருபாலரின் உறவு முறைகளும் முற்றிலும் பிரிந்துள்ளதைக் காணலாம். சாதியை ஒழிக்கும் வழி கலப்பு மணமேயாகும் என்பதை,

> "செம்புலப் பெயல் நீரில்
> நாணச்சுழிகள் எழுந்ததன்றி சாதி
> நச்சுத்துறிகள் விழுந்ததில்லை."

(-வணக்கம் வள்ளுவ - பக். 175)

மற்றொரு கதையில்,

> "கால காலமாய்
> சிறைக் கம்பிகளுக்குப் பின்னால்
> காத்து நின்ற காதல் சவத்திற்கு
> கோடி போட கண்களால் ஒரு

துணி நெய்வதைக் காட்டிலும்
சுதந்திரமான ஒரு தழுவில்
உயிர்க்கு விடுதலை தருவது
எவ்வளவு அதிகம்"

- (நிலாவந்த நேரம். பக். 72)

என்று கலப்புமணத்திற்கு ஆதரவளிக்கிறார்.

சமுதாயத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகளைப் போக்கக் கல்வி ஒரு கருவியாகப் பயன்பட்டது. உயர் சாதியினரிடம் அடிமைப்பட்டுக் கிடந்ததற்குக் காரணம் கல்வி அறிவு இன்மையே என்பதைத் தாழ்ந்த சாதியினர் நன்கு உணர்ந்திருந்தனர். தங்களுடைய தலைமுறையை யாவது இதிலிருந்து விடுவிக்க வேண்டும் என்று விரும்பினர். இம்மாற்றத்தை,

"எத்தனையோ தூரம் எல்லாம் ஏமாந்து போயிட்டோம்
அந்த ஏமாந்தவங்க நம்மளாட்ட
ஏமாளிப் பொழப்பு பொழைக்காமல் ரெண்டெழுத்தைப்
படிச்சு கருக்கடையா இருக்கட்டும் என்ற கூற்றின் வாயிலாக அறியலாம்.

**இதழ்கள் வழி தலித்தியம்**

தமிழ் தலித் இலக்கியத்தின் தோற்றத்திற்கு இதழ்கள் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்துள்ளன. "நிறப்பிரிகை" போன்ற இதழ்கள் தொடர்ந்து தலித் இலக்கியம் என்பதற்கான விவாதத்தை ஏற்படுத்தி அதனைப் பற்றிய புரிதல்களை மக்களிடம் கொண்டுபோய்ச் சேர்த்துள்ளன. பல புதிய இதழ்களின் தோற்றமும் கோடங்கி, தாய்மண், தலித் முரசு போன்ற தலித் சமூக இதழ்களும், காலச்சுவடு, வல்லினம், தீம்தரிகிட, நாவாவின் ஆராய்ச்சி போன்ற இலக்கிய இதழ்களும் தத்தமது பங்களிப்பைச் செய்துள்ளன.

**சமுதாயத்தில் தலித் மக்களின் நிலை**

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகச் சமூக அரசியல் பொருளாதாரத் தளத்தில் மிகவும் ஒடுக்கப்பட்டவர்களாக உள்ளவர்கள் தலித் மக்கள். நாடு சுதந்திரம் அடைந்து சுதந்திரப் பொன்விழா கொண்டாடிய பின்னும், சாதிச்சண்டைகளும், சாதியின் பெயரால் தலித் மக்கள் இழிவுபடுத்தப்படும் நிலையும் தொடர்ந்து வருவது ஆரோக்கியமான சூழல் அன்று. இன்று நடைபெறும் சாதிய மோதல்களுக்கு ஆளாகுபவர்கள் பிற்படுத்தப்பட்டவர்கள். இவர்களில் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் தலித் மக்களே. சான்றாக, இதற்கு முதுகுளத்தூர்,

கீழ்வெண்மணி, பொடியங்குளம் போன்ற ஊர்களின் மக்களைக் குறிப்பிடலாம்.

இந்திய சாதியச் சமூகக்கட்டமைப்பின் தொடக்க காலந்தொட்டே மனித சமுதாயத்தின் ஒரு பகுதி மக்கள் சமூக-பண்பாட்டு மரபுகளிலிருந்தும் விலக்கி வைக்கப்பட்டுள்ளதைச் சமூக வரலாறு புலப்படுத்துகின்றது. இவர்கள் இழிவானவர்களாகக் கருதப்பட்டனர். சமுதாயத்தின் விளிம்புநிலையில் அல்லது சாதி அடிப்படையில், கீழ்நிலையில் நிறுத்தப்பட்டனர். தூய்மைக் கோட்பாட்டின் அடிப்படையில் தீண்டத்தகாதவர்களாக ஆக்கப்பட்டனர். தீண்டாமை இவர்களது பிறப்போடு தொடர்பு படுத்தப்பட்டது. இச்சமூக வரலாற்றுப் போக்கின் பிரதிபலிப்பாகவே தமிழ் இலக்கிய மரபும் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது.

பொதுவாகத் தமிழ் இலக்கிய வரலாற்றின் நெடுகிலும் தலித்துகள் இலக்கிய மரபில் புறக்கணிக்கப்பட்டவர்களாகவும் விளிம்பு நிலையில் நிறுத்தப்பட்டவர்களாகவும் காட்சியளிக்கின்றனர். இலக்கியங்களின் கருப்பொருளாக உள்ளடக்கமாகத் தலித்துக்கள் இருக்கவில்லை. கதைப் போக்கில் தெளிவில்லாத சித்திரங்களைப் போலவே சுட்டப்படுகின்றனர். பண்பாட்டு மரபு அற்றவர்களாக ஒதுக்கப் படுகின்றனர். இவற்றுக்கான அளவு கோல்களை இலக்கியங்கள் முன்னெடுத்துக் கொடுத்திருப்பதையும் அறிய முடிகிறது. செவ்வியல் இலக்கியம் என்று போற்றப் பெறும் சங்க இலக்கியம் தொடங்கி அண்மைக்காலம் வரை இப்போக்கு நிலவியிருந்ததை இலக்கிய வரலாறு எடுத்துக்காட்டுகிறது.

**இலக்கிய வரலாற்று வழி தலித்தியம்**

தூய்மைக் கோட்பாட்டின் அடிப்படையில் குடிகளுக்கிடையில் உயர்வு, தாழ்வு கற்பிக்கப்பட்டதையும் அவை இவர்தம் பிறப்போடு சார்த்தி வழங்கப்பட்ட சமூக வழக்கினையும் பாடல்கள் பதிவு செய்துள்ளன. பாணர், துடியர், பிறர் அழுக்கை வெளுப்போர், கூடை முடைவோர், வயல் வெளிகளில் வேலை செய்தோர் முதலானோர் இழிந்தவர்களாகச் சுட்டப்பட்டனர். புலையன், புலத்தி, இழிபிறப்பாளர், இழிசினை, கடைசியர் என்று இகழப்படுகின்றனர். இம் மக்கள் சமூகத் தகுதியும், இலக்கியத் தகுதியும் பெறுவதினின்றும் மறுக்கப்படுகின்றனர். இவர்களுடைய வாழிடம் புறஞ்சேரி என்று குறிப்பிடப்படுகிறது.

தோல் பொருள், பிறர் அழுக்கு, பிரசவத் தீட்டு முதலியவற்றோடு தொடர்புடையவர்களை இழிவானவர்களாகச் சங்க இலக்கியம் காட்டுகிறது. இம்மக்கட் பிரிவினரே பிற்காலத்தில் வைதீகப்

பண்பாட்டுச் சூழலில் தீண்டாமைக் கொடுமைக்கு உட்படுத்தப்பட்டுத் தீண்டத்தகாதவர்கள் ஆக்கப்பட்டனர். இடைக்காலத்தில் வேளாண்மை மயமாக்கலின் வரலாற்றுப் பின்னணியில் மையமிட்ட அதிகாரக் கட்டமைப்பாக அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. இதில் தீண்டத்தகாதவர்கள் கோவிலுக்கு வெளியே நிறுத்தி வைக்கப்பட்டனர், தீண்டத்தகாதவர்களுக்கும், பிறருக்கும் இமையேயான இத்தகைய பொருண்மை வேறுபாடுகளை இடைக்காலத்தில் தோன்றிய பக்தி இலக்கியங்கள் நிலை நிறுத்தியுள்ளன என்பதற்கு நம்மாழ்வாரின் பாடலைச் சான்றாகக் காட்டலாம்.

> **"குலம் தாங்கு சாதிகள் நாலிலும் கீழ் இழிந்து எத்தனை**
> **நலம் தான் இல்லாத சண்டாளர்களாயினும்**
> **வலம் தாங்கு சக்கரத்து அண்ணல் மணிவண்ணாற்கு ஆள் என்று உள்**
> **கலந்தார் அடியார் தம் அடியார் என் அடிகளே"**

என்னும் நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில், குலம் தாங்கு சாதிகள் நாலிலும் கீழ் இழிந்து எத்தனை நலம் தான் இல்லாத சண்டாளர்" என்பது தீண்டத்தகாதவர்களைக் குறிக்கின்றது.

"ஜாதி" என்பது சமுதாய உணர்வைக் கடந்த ஒன்று மக்கள் மத்தியில் ஏற்றத் தாழ்வு ஏற்படுத்தும் ஓர் ஊடகம். மகாத்மா காந்தியடிகள் "அரிஜன்" - என்பதற்கு இறைவனின் குழந்தைகள் - என்று பொருள் கூறிய நிலை மாறி சமுதாயத்தில் உயர்ந்த சாதியினர் மத்தியில், மனதில், உணர்வில் ஜாதி என்ற பெயரால் தலித்துகள் அவமானப்படுவது ஒரு தொற்று நோயாகவே தொடர்கின்றது என்பதை இக்கட்டுரை பதிவு செய்துள்ளது.